13.02.2025

O.S.No.184/2015

வா.சா.3.திரு.சந்திரன் த.பெ.உடையப்பபிள்ளை

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 3 ம் சாட்சி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு** குறுக்கு விசாரணை

நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வழக்கறிஞர் அழைத்ததன்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்தேன். 1 ம் வாதி சண்முகம்பிள்ளை எனது சித்தியின் கணவர் ஆவார். வழக்கு சொத்துக்கு அருகே எனக்கு விவசாய பூமி இருப்பதாக சொல்லியிருப்பதால் அதை காட்டும் வகையில் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் பாதையை ஆக்கிரமித்து வைத்திருப்பதாக சொல்லியிருப்பதால் அது சம்மந்தமாக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. 2015 ம் ஆண்டு வாதிகளுக்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே அடிதடி பிரச்சனை ஏற்பட்டதாக நான் சொல்லியிருப்பதால் அப்போது நான் அங்கே இருந்தேனா என்றால் நான் அங்கு இல்லை. நாங்கள் விவசாய பொருட்களை போட்டு வைப்பதற்கு களமாக பயன்படுத்தி வருவதாக சொல்லப்படும் இடத்தில் மது அருந்திவிட்டு பாட்டில்களை உடைத்து போட்டுவிடுவதாக சொல்லியிருப்பதால் அது சம்மந்தமாக நான் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையிலேயே அவ்வாறு எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அவ்வாறு நடைபெற்று இருந்தால் நான் அது சம்மந்தமாக புகார் அளித்திருப்பேன் என்றாலும் வாதிகள் எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதராவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. வாதிகள் தாவா சொத்தில் மாட்டு கொட்டகை அமைத்து மாடுகள் கட்டி பயன்படுத்திவருவதாக நான் சொல்லியிருப்பதால் அந்த பகுதிக்கான சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் பிறந்தது முதல் அவர்கள் மாடு கட்டிவருவதை நான் பார்த்து வருகிறேன். நான் கூறுவதுபோல் வாதிகள் தாவா சொத்தில் மாட்டுகொட்டகை அமைத்து மாடு கட்டி பயன்படுத்திவரவில்லை என்றாலும் 1 ம் வாதி எனது சித்தியின் கணவர் என்பதால் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.